**வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம் - 2023/2024**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியத்தின் (“கம்பனி”) 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற

தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பொது முயற்சிகள் திணைக்களத்தால் 2021 நவம்பர் 16 இல் வெளியிடப்பட்ட அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான (SOEs) கூட்டிணைந்த ஆளுகை மற்றும் செயற்பாட்டு கையேடு பற்றிய வழிகாட்டல்கள் இல. 01/2021 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | வழிகாட்டல் 4.2 (ஏ) | குறிப்பிட்ட ஆண்டில் குறைந்தபட்சம் 04 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் கம்பனி ஒரு கூட்டத்தை மாத்திரமே நடாத்தியிருந்தது. | மீளாய்வாண்டில் இரண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. | வழிகாட்டலுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 4.4 ஆம் பிரிவு | அமைச்சினால் நடாத்தப்பட்ட உள்ளக கணக்காய்வு சரியாகச் செயற்படவில்லை. | உள்ளக கணக்காய்வை நடாத்துமாறு கல்வி அமைச்சிடம் கம்பனி கோரிக்கை விடுத்துள்ளது. | வழிகாட்டலுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (iii) | 5.3 ஆம் பிரிவு | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடனளிப்பு சோதனையை (solvency test) திருப்திப்படுத்திய பின்னர், வரிக்குப் பின்னரான இலாபத்தில் குறைந்தபட்சம் 30 சதவீதத்தை திரட்டிய நிதியம்/ பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிற போதிலும் அதனுடன் கம்பனி இணங்கியிருக்கவில்லை. | பங்குதாரர் வட்டி பதிவேட்டில் உள்ள சிக்கல்களால் பகிர்ந்தளிப்பு தாமதமாகியது. | சுற்றறிக்கை தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை | பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது ஊக்குவிப்பு படியாக ரூபா 600,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதவியணியினர் ஊக்குவிப்பு படிக் கொடுப்பனவுபணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து தேவையான அங்கீகாரம் கோரப்பட்டது. | பொதுமுயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு | கம்பனி நடாத்தும் கற்கைநெறிகள் மற்றும் பரீட்சைகள் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அது 2024 மார்ச் 31 வரை மேற்கொள்ளப்படவில்லை. எனினும், கம்பனி TVEC இல் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுடன் மாத்திரமே பரீட்சைகள் மற்றும் கற்கைநெறிகளை நடாத்துவதற்கு மூன்றாம் தரப்பினருடன் உடன்படிக்கைகளை செய்திருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக கம்பனி 5 மூன்றாம் தரப்பு நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளை செய்திருந்தது. | எங்களுடன் பணிபுரியும் இந்தக் கல்வி நிறுவனங்களிற்கு TVEC இன் பதிவைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்துடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 161,076 தொகை கடந்த பல ஆண்டுகளாக செயற்பாடற்ற நடைமுறைக் கணக்கில் செயற்திறனாக பயன்படுத்தப்படாமல் இருந்தது. | கம்பனி இந்த விடயத்தை அமைச்சு அதிகாரிகளுடனும் கணக்காய்வுக் குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடியிருந்ததுடன் 2024 செப்தெம்பரில் இந்த விடயத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கும். | கணக்கை செயற்படுத்துவதற்கு அல்லது மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 44,338,930 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 28,591,321 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 15,747,609 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே இம் முன்னேற்றத்திற்கான காரணமாகும்.

## 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின உருப்படிகளின் பகுப்பாய்வானது அதிகரிப்பு சதவீதத்துடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | 2023/2024 ஆண்டிற்கானது ரூபா | 2022/2023 ஆண்டிற்கானது ரூபா | வேறுபாடுகள் [சாதகமானது (பாதகமானது)] ரூபா | சதவீதம் % |
|---|---|---|---|---|
| **<u>வருமானம்</u>** | | | | |
| கல்வி நிகழ்ச்சித்திட்ட வருமானம் | 30,823,196 | 18,616,720 | 12,206,476 | 66 |
| பொது தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட வருமானம் | 56,051,000 | 21,562,000 | 34,489,000 | 160 |
| **<u>செலவினம்</u>** | | | | |
| நேரடி கிரயம் | 10,609,926 | 6,686,429 | 3,923,497 | 59 |
| மேலதிக நேர படி | 2,734,059 | 215,766 | 2,518,293 | 1,167 |
| சபை உறுப்பினர்களிற்கான செலவினம் | 967,651 | 306,450 | 661,201 | 215 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிற்கு ரூபா 1,000,000 விளம்பரம் மற்றும் ஊக்குவிப்புக் கட்டணத்தை அறவிடுவதன் மூலம் ஏற்கனவேயுள்ள அத்தகைய 5 நிகழ்ச்சித்திட்டங்களை முறைப்படுத்தியமை மற்றும் சான்றிதழ் கட்டணங்கள் மற்றும் வழங்கும் சான்றிதழ்களின் எண்ணிக்கை அதிகரித்தமை ஆகியவற்றின் காரணமாக பொதுத் தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்டங்களின் வருமானம் கடுமையாக அதிகரித்துள்ளது.

(ii) மீளாய்வாண்டில் வளவாளர் கட்டணங்கள் மற்றும் எரிபொருள், தபால், உபசரணை, விளம்பரச் செலவுகள் போன்றன அதிகரித்ததன் காரணமாக நேரடி கிரயம் 59 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

(iii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது மேலதிக நேர படி 1167 சதவீதத்திற்கு சமமான ரூபா 2,518,293 ஆல் அதிகரித்துள்ளது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பங்குதாரர்களின் வட்டி பதிவேட்டில் எழுகின்ற முரண்பாடுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அடுத்த சபைக் கூட்டத்திற்கு அனுப்புவோம். | முரண்பாடுகளை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |